| Headline | Speak Good English Movement reaped benefits | | |
|---|---|---|---|
| **Date** | 2008-08-27 | | |
| **Media Title** | Tamil Murasu (Mon-Sat) | **Section** | News |
| **Page No** | 2 | **Size** | 5x20cm |
| **Description** | Yesterday at the launch of the Speak Good English Movement Minister from the Prime Minister's Office, Lim Boon Heng said that the campaign will focus on the service and retail sectors. | | |

# நல்ல ஆங்கிலம் பேசும் இயக்கம் பலன் அளிக்கிறது

சிங்கப்பூரர்கள் முன்பை விட இப்போது நல்ல ஆங்கிலத்தில் பேசுகின்றனர்.

ஆனால் சேவைத் துறை ஊழியர்களிடையே ஆங்கிலப் பேச்சு அவ்வளவாக சரியில்லை.

சிங்கப்பூர் பலதுறை தொழிற்கல்லூரி மாணவர்கள் மேற்கொண்ட ஆய்வில் இது தெரிய வந்தது.

ஆய்வில் கலந்துகொண்ட 15 முதல் 39 வயது வரைப்பட்ட 1,200 பேரும் கடந்த 2 ஆண்டுகளில் தங்களுடைய ஆங்கில மொழியின் தரம் மேம்பட்டிருக்கிறது என்று தெரிவித்தனர்.

நல்ல ஆங்கிலம் பேசும் இயக்கத்தை நேற்று தொடங்கி வைத்துப் பேசிய பிரதமர் அலுவலக அமைச்சர் லிம் பூன் ஹெங், "அன்றாடம் சந்தித்துப் பேசும் சேவைத் துறை ஊழியர்களுக்கு ஆங்கிலம் மிக முக்கியம்," என்றார்.

இவ்வாண்டின் நல்ல ஆங்கிலம் பேசும் இயக்கம், சேவைத் துறை ஊழியர்களை இலக்காகக் கொண் டிருக்கும்.